★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 10 மார்கழி 11 முறைறம்: 25 இதழ் 312

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26 12-78

## கச்சாயில் ஐந்து நிமிட கடுங்காற்று! வீடுகள், குடிசைகள் சேதம்!

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் மாலை, சாவகச்சேரித் தொகுதியில் உள்ள கச்சாய்ப் பகுதியில் சுமார் ஐந்து நிமிடம் வீசிய கடும் காற்றினல் வீடுகள், குடிசைகள் பலத்த சேதமடைந்தன. தென்னைமரங்கள் சாய்ந்து விழுந்தன.

அல்லாரை, வெல்லாம்பிட்டிக் கிராமங்களில் மூன்று வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

பன்னிரண்டு குடிசைகள் முற்ருகத் தரைமட்டமாகின. நூற்றுக்கணக்கான தென்னை மரங்களும் மற்றும் பாரிய மரங்கள் சிலவும் வேரோடு சாய்ந்துவிட்டன!

ஒரு வீட்டின் நடுவே பாரிய மரமொன்று விழுந்ததாயினும் அதிர்ஷ்டவசமாக அங்கிருந்த வயோதியர் எதுவித காயமுமின்றித் தப்பினர்!

பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் நேரில் சென்று கஷ்டமுறும் மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

பாதிக்கபட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும்முகமாகச் சாவகச்சேரி எம். பி. சமூக சேவைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டுள்ளார். (கெ)

★ 'தமிழர்மீதான பொலிஸ் தாக்குதல்'

# 'சிங்களக் கவிதை' பற்றி உயர்மட்ட விசாரணை!

## இன்றும் மழை

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் இன்றும் மழை பெய்யலாம் என்றும் நாட்டின் மேற்குப்பகுதியில் கடும்மழை இருக்கும் என்றும் அவதான நிலையம் நேற்றிரவு அறிவித்தது.

## 'அமிர்' புகார் மீது ஜனதிபதி நடவடிக்கை

(நமது நிருபர் சு. தர்மசிங்கம்)

வடபகுதியிலுள்ள தமிழர்களைத் தாக்கும்படிகோரி, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் 'சிங்களக்கடிதக்கவிதை' தொடர்பாக இப்பொழுது உயர்மட்ட விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இது சம்பந்தமான விசாரணைகளை வடபிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எல். சி. டி. சிறிஹேரத் நடத்திவருகின்றார்.

### 'அமிர்' புகார் எதிரொலி

வடபகுதித் தமிழர்களைத் தாக்குமாறு கோரி, யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபரின் 'றபர் ஸ்டாம்ப்' குத்தப்பட்ட சிங்களக் கவிதை ரூபத்தில் அமைந்த[கடிதங்கள், வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்றும்; இதனை திட்டமிட்டு எவரோ, யாழ். பொலிஸ் அதிபர் திரு. எகொடபிட்டியாவின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் செய்துள்ளார் என்றும், இது குறித்து உடனடியாக, பலனுள்ள தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு எழுதிய கடிதமொன்றில் கோரியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ். நகரிலும், வேறு சிலஇடங்களிலும் தாக்குதல்கள்நடைபெறுகின்றனஎன்றும்யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் லொறிச்சாரதிகள் வவனியா, மாங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றனரென்றும் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்படி கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

### வடபகுதியில் விசாரணை

தமிழரைத் தாக்குமாறு கோரி அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பாக பூரணவிசாரணை நடத்துமாறு ஜனதிபதி, பொலிஸ்மா அதிபரைப்பணித்ததைத் தொடர்ந்து வடபிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்திரு.எல்.சி.டி சிறிஹேரத் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அந்தச் சிங்களக் கடிதங்கள்' தொடர்பாக இவர் தற்பொழுது வடபகுதியின் பல பொலிஸ் நிலையங்களுக்கும் சென்று விசாரணைகள் நடத்திவருகின்றார்.

## மட்டக்களப்பில் காலநிலை சீரடைகிறது

### வாகனப் போக்குவரத்து சீர்குலைவு

[கொழும்பு[

ஒருமாத காலத்துக்குள் அடுத்தடுத்து பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, பொலன்நறுவ மாவட்டங்களில் இப்பொழுது காலநிலை ஓரளவு சீரடைந்து வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று காலநிலை திருத்திகரமாகவிருந்தது ஆனலும் வீதிபபோக்குவரத்துகள், பல இடங்களிலும்பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்றிரவு இங்குகிடைக்கப் பெற்ற கடைசி செய்திகளின்படி, இபகுதிகளில் மழைசற்று ஓய்ந்து, வெள்ளம் வடியத் தொடங்கியுள்ளதென்றும், கல்முனையில் பல கிராமங்கள் நீரினல் சூழபபட்டுள்ளனஎன்றும் தெரியவருகிறது.

கொழும்பு - மட்டக்களப்பு பாதையில், மன்னம்பிட்டி - புனனை சாலைபகுதி வெள்ளத்தினல் பாதிக்கபட்டுள்ளது கொழும்பு-மட்டக்களபபுரயில் பாதையில். ஏறுவூர் - மட்டக்களப்பு பாதை பாதிக்கப்பட்டபோதிலும் திருத்த வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதன் பலனக இப்பாதையில் ரயில் சேவை வழமைபோல் ஆனது

மட்டக்களப்பு, பொலன்நறுவ மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று இரண்டு ஹெலிகொப்டர்களில் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக்கபபட்டன.

## கல்முனை-சம்மாந்துறை வீதியில் 5 அடி வெள்ளம்

### மதகுகளும் சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் பெருமழையால், பல வீதிகள், மதகுகள் சேதமடைந்துள்ளன.

கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையால் வாழைச்சேனை வீதிகளில் 5 அடி நீர் பாய்கிறது.

சம்மாந்துறை-கல்முனை வீதியிலும் 5 அடி நீர் பாய்கின்றது.

சமூக சேவைகள் பகுதி 2 ஹெலிகொப்டர்களிலும், 2 கடற்படைப் படகுகளிலும் நிவாரணப் பொருட்களை அனுப்பியுள்ளது. (உ)

## அனுராதபுரம் மட்டுமே பஸ் சேவை

### ரயில் சேவையில் பாதிப்பு இல்லை

[யாழ்ப்பாணம்]

கடும்மழை காரணமாக யாழ்ப்பாண டிப்போவிலிருந்து மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, திருமலை, கொழும்பு ஆகிய தூர இடங்களுக்கான பஸ்சேவை இன்றும் நடைபெறமாட்டாது.

அனுராதபுரம் வரையில் மட்டுமான சகல சேவைகளும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்று யாழ். டிப்போ அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்கு நேற்றிரவு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முதல் நிறுத்தப்பட்ட, சாட்டி ஊடான ஊர்காவற்றுறை செல்லும் உள்ளூர்ச் சேவை, பாதை சீரில்லாமையால் இன்றும் நடைபெறமாட்டாது. மற்றைய பஸ் சேவைகள் அனைத்தும் வழமைக்கு திரும்பி விட்டன.

### ரயில் சேவை வழமைபோல்.:.

கால அட்டவணைக்கமைய சகலரயில்சேவைகளும் வழமைபோல் இன்றும் நடைபெறும். [கெ]

## இந்திரா கைது எதிரொலி: ஒரு லட்சத்து 28,000 பேர் கைது! இராணுவம் உஷார்!

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தி கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்து, சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து, இந்தியா பூராவும் திருமதி இந்திராகாந்தி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி, வன்செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்று வரை, ஒரு லட்சத்து இருபத்தெட்டாயிரம் இந்திரா ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் நேற்றுத் தொடர்ந்தும் வன்செயல்கள் இடம்பெற்றன.

நேற்று வெளியான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்திகள் ''இந்தியாவில் இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் புதுடில்லியில் முக்கிய இடங்களிலும், அரசு அலுவலகங்களிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்'' என்று தெரிவிக்கின்றன.

மேற்கண்ட தகவல்களை புதுடில்லியிலுள்ள 'டாஸ்' செய்தி நிறுவனமும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கரவெட்டியைச் சேர்ந்த கட்டைவேலி மெதடிஸ்த கோவிலில் இப்பில் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு கன்றின் விலை 25 சதம். ஆடு, மாடு, கோழி போன்ற பிராணிகளுக்கு உணவாகும். 1135

### வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

சுமார் 14,000 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத் திகதி 10-01-1979 புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை. கேள்விப்பணம் ரூபா 2/- செலுத்திக் கேள்விப் பத்திரங்கள் 27-12-78 தொடக்கம் 9-1-79 நண்பகல் 12-00 வரை இச்சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கட்டுப்பணம் ரூபா 250/- கேள்விப்பத்திரத்துடன் முடிவுத் திகதி முன்னதாக "பொதுமுகாமையாளர், தென்மராட்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி" என்ற விலாசத்திற்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திர விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம்,
கைதடி,
1978-12-23. 1150

கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

### தரம் 111

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்துக்கு 5-1-79க்கிடையில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தராதரம் ஏனைய விபரங்களை 31-12-78க்கிடையில் தபால் மூலம் அல்லது நேரில் மேற்படி கரைதுறைப்பற்றுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.

1143

### அறிவித்தல்

நண்பர்களுக்கு நாம் விநியோகித்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்ட சீட்டுக்கள் வந்துசேராதபடியால் 25-12-78திகதி நடைபெறவில்லை. 26-3-79-ல் இச் சீட்டிழுப்பு நடைபெறும்.

இங்ஙனம்
செயலாளர்
கத்தோலிக்க சங்கம்
அரசினர் வைத்தியசாலை
தெல்லிப்பழை.
1151

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## சூறாவளியால் சேதமடைந்த

# இந்து ஆலய விவரங்களை இந்து மாமன்றம் சேகரிக்கிறது

(கொழும்பு)

சமீபத்தில் சூறாவளியால் பாதிப்புற்ற இந்து ஆலயங்களின் விவரங்களைச் சேகரிப்பதில் அகில இலங்கை இந்துமாமன்றம் ஈடுபட்டுள்ளது.

மன்றத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேதமுற்ற ஆலயங்களின் விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறும் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல அன்பர்களின் உதவியினுல் கிடைத்த உணவு, உடை முதலியவற்றை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமூலம் மன்றம் விமான மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் கிழக்குமாகாணத்துக்கு அனுப்பிவைத்திருந்தது.

## இவர்களுக்கு இனி 'கியூ' முறை இராது

(கொழும்பு)

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை சுங்க இலாகா சோதனையிடும்போது புதிய முறை ஒன்று கையாளப்படவிருக்கிறது.

சாதாரண பிரயாணிகளைப் போல் கியூ வரிசையில் அல்லாமல் இவர்கள் சோதனையிடப்படுவர். (உ)

## அல்வாய்க்கு நவீன சந்தை

[புலோலி]

பருத்தித்துறை தொகுதியிலுள்ள அல்வாய்தெற்கில் நவீனசந்தையொன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த நவீனசந்தையை அமைப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் 20,000 ரூபாவை பருத்தித்துறை எம். பி. திரு. அ. துரைரத்தினம் ஒதுக்கியுள்ளார். (அ)

## படுவான் கரையில்

# பசளைத் தட்டுப்பாட்டினுல் விவசாயம் பாதிப்பு

[மட்டுநகர்]

படுவான்கரைப் பகுதியிலிருந்த விவசாயத் தாபனங்கள் சேதமடைந்ததை தொடர்ந்து அங்குள்ள விவசாயிகள் பசளைத்தட்டுப்பாட்டினுல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யூறியா பசளைத் தட்டுப்பாடு காரணமாக மட்டக்களப்பின் முக்கிய விவசாய பிராந்தியமான படுவான் கரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும்போக விவசாயச் செய்கை பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்படலாமென விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றுர்கள்.

சூறாவளியினுல் இருப்பிடங்களை இழந்து பரிதவிக்கும் படுவான்கரை விவசாயிகளுக்கு வேண்டிய அளவில் பசளை வகைகளைத் தட்டுப்பாடின்றிப் பெற மாவட்டப்புனரமைப்புக் குழுவையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோருகின்றுர்கள். [அ]

## அடகு மீட்கவந்தவர்கள் ஏமாற்றம்

[உடுப்பிட்டி]

மூடப்பட்ட கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியினுல் அனுப்பிவைக்கப்பட்டிருந்த அறிவித்தலைத் தொடர்ந்து தமது அடைவுநகைகளை மீட்பதற்காகச் சென்றவர்கள் பிரஸ்தாப வங்கி திறக்கப்படாததினுல் பலமணி நேரமாகக் காத்துக்கிடந்து ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினர்.

கடந்த 22ந் திகதி இக்கிராமிய வங்கி தற்காலிகமாகத் திறக்கப்பட்டு அடைவு நகைகள் மீளளிப்புச்செய்யப்படும் என்று அடைவு வைத்தவர்களுக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து பெருந்தொகையானேர் கிராமிய வங்கிக்குச் சென்றபோது வங்கி திறக்கப்படாது மூடப்பட்டிருந்தது. பொலிஸ்பாதுகாப்பு நடவடிக்கைகள் உரியநேரத்தில் கிடைக்காமையினுலே ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி அடைவுநகை விநியோகம் நிறுத்தப்பட்டு அடுத்தமாதம் 8ந்தேதி அடைவு நகைகளை மீட்பதற்காக இக் கிராமியவங்கி தற்காலிகமாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஆண்டில்

# பாராளுமன்றத்தில் பாதுகாப்பு நடவடிக்கை

(கொழும்பு)

புதிய ஆண்டிலிருந்து பாராளுமன்றத்தில் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதெனச் சபாநாயகர் ஜனுப் பாக்கீர் மாக்கார் தலைமையில் கூடிய உயர்மட்ட மகாநாட்டில் முடிவாகியுள்ளது. இம்மகாநாட்டில்மேலும் எடுக்கப்பட்ட முடிவுகளாவன:

பாராளுமன்ற உறுப்பினர்களின் கடிதம் பெற்று அனுமதிச் சீட்டுடன் பாராளுமன்றப் பார்வையாளர் கலரிக்குச் செல்பவர்கள் தமது அடையாள அட்டையையும் கொண்டு செல்லவேண்டும். பார்வையாளருக்கு வழங்கப்படும் அனுமதிச்சீட்டில் பார்வையாளரின் பெயர், முகவரி, கையொப்பம், அடையாள அட்டை இலக்கம் போன்ற விபரங்கள் பதியப்படவுள்ளன.

இது தவிர, பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் ஆயுதங்களை மறைத்துக்கொண்டு வருபவர்களைக் காட்டிக்கொடுக்கும் இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன. பாராளுமன்றப் பாதுகாப்புக்கென விசேட பொலிஸ் பிரிவு உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் தலைமையில் தனியாக நிறுவப்படவுள்ளது.

பாராளுமன்றத்தின் பிரதான மண்டபத்தில் வைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொதுமக்கள் சந்திக்கமுடியாது. இச்சந்திப்பு லோட்டஸ் வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கும் அறையில் தான் இனிமேல் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கலாம்.

பாராளுமன்றத்தில் மின்சாரம் தடைப்படும்பொழுது தன்னியக்க மின்சார இயந்திரம் பொருத்தப்படவுள்ளது. (ஊ-அ)

## "உருவாக்குவதில் ஆசிரியர்பங்கு"

(புலோலி)

'எதிர்காலச் சமுதாயத்தினரைக் கல்விமான்களாகவும், நிபுணர்களாகவும், சிறந்த அரசியல் தலைவர்களாகவும் உருவாக்கி நாட்டில் நற்பிரஜைகளைக்கொண்ட சமுதாயத்தை அமைக்கும் பணியில் ஆசிரியர்களின் பங்கு மிகமுக்கியமானது.'

மேற்கண்டவாறு இலங்கை தமிழர் ஆசிரியர்சங்க பருத்தித்துறைக்கிளையின் முன்னுள் செயலாளரும், கற்கோவளம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராயிருந்தவருமான அமரர் சி. எஸ். கணபதிப்பிள்ளையின் நினைவு தினவிழாவில் உரையாற்றிய யாழ்.மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. நவரத்தினம் குறிப்பிட்டார். டாக்டர் அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நினைவுதினவிழாவில் அமரரின் உருவப்படத்தை பிரதம கல்விஅதிகாரி திரைநீக்கம் செய்துவைத்தார்.

அகில இலங்கை தமிழர்ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு. அ. பொன்னம்பலம் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. சிவ பாலசிங்கம், பருத்தித்துறைக்கிளைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம், பருத்தித்துறை வட்டாரக் கல்விஅதிகாரி திரு. என். துரைச்சாமி, யாழ். இலங்கைத்தொழில்நுட்பக்கல்லூரி வணிகமாணவமன்றச்செயலாளர் திரு. என். எஸ். திருச்செல்வம் திருவாளர்கள் செ. நடராசா, ஆ. வடிவேலு, க. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் உட்பட வேறுபலரும் உரையாற்றினர். (அ)

# புதியபல்கலைக்கழகங்களின் வேந்தர்களும் உபவேந்தர்களும்

(கொழும்பு)

புதிய பல்கலைக்கழக அமைப்பு முறை அடுத்த மாத முற்பகுதியில் செயல்படவுள்ளது. புதிய பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் அமையும் பல்கலைக்கழக அமைப்பு முறையின்படி பல்கலைக்கழக வளாகங்கள் தனித்துவமான ஒவ்வொரு பல்கலைக்கழகமாகத் தனித்தனிப் பல்கலைக்கழக வேந்தர், உப வேந்தர்களுடன் செயற்படும்.

உயர் கல்வி அமைச்சினுல் அறிவிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக உப வேந்தர்கள் விபரம் வருமாறு:

கொழும்புப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எம் பி ஆரியபாலா, கட்டுப்பெத்தைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் உபாலி குருப்பு, பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் டி எல் பண்டிதரத்ன, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக (முன்னைய வித்தியோதய வளாகம்) உப வேந்தர் பேராசிரியர் ஜினதாசபெரேரா களனி பல்கலைக்கழக (முன்னைய வித்தியாலங்கார வளாகம்) உப வேந்தர் பேராசிரியர் திலக் ரத்னுகர. றுகுணை பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி ஜி சி என் ஜெயசூரியா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எஸ் வித்தியானந்தன், திறந்த பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி ரி விஜேசிங்கா.

புதிய பல்கலைக்கழகங்களுக்கான வேந்தர் விபரம்:

கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் டி ஏ ரணசிங்கா, பேராதனைப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் திரு விக்டர் தென்னக்கூன், கட்டுப்பெத்தை பல்கலைக்கழக வேந்தர் திரு ஆதர் சி கிளார்க், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஈ டபிள்யூ அதிகாரம், களனி பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி வண வலபொல ராகுல, றுகுணை பல்கலைக்கழகவேந்தர் திரு ஜி பி ஏ சில்வா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் திரு. வி மாணிக்கவாசகர், திறந்த பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி காமினி கோபரா.

தனிப் பல்கலைக்கழகங்கள் யாவற்றுக்குமான விசாலக் குழுவின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் கல்வியமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குழுவின் தலைவர் கலாநிதி ஸ்டான்லி கல்பகே, பிற உறுப்பினர்கள் திரு டி எம் சுவாமிநாதன், பேராசிரியர் சி தகநாயக்கா, பேராசிரியர் கே எம் டி சில்வா, கலாநிதி ஸ்டான்லி விஜேசுந்தர. (ஊ-அ)

"துன்பத்தின் எல்லையில்தான் இன்பம்

# கிழக்கில் இயற்கையின் சீற்றம்: வடக்கில் அரசுபடை வெறியாட்டம்

## இவை விடிவுக்கு அறிகுறி" என்கிறார் 'அமிர்'

(சுழிபுரம்)

'எம் இனத்திற்கு சோதனைமேல் சோதனையான காலமாக இன்று இருக்கின்றது. கிழக்கே வாழும் மக்கள் இயற்கையின் சோதனையால் வீடு, வாசல், சொத்து யாவும் இழந்து வாழ்வில் பெரும் அல்லல் படுகிறார்கள். வடக்கே அரசபடைகளின் வெறியாட்டத்தால் கொள்ளை, தீவைப்பு துன்புறுத்தல் போன்றவற்றால் மக்கள் துயரடைவதுடன் சிலர் தமது வீடுகளைத் தீக்கு இரைகொடுத்து நடுத்தெருவில் வாழும் காட்சியைக் காண்கின்றோம். இவற்றுக்கு ஒரு முடிவு தான் இல்லையா? துன்பத்தின் எல்லையிலேதான் இன்பம். ஆதலால் எமது இனத்தின் விடிவு மிக விரைவில் என்பது திண்ணம்'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி திரு. ரி. விக்னராஜாவுக்கு தமிழர்விடுதலைக்கூட்டணியின் வட்டுக்கோட்டை கிளையினால் அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவில் பேசுகையில் கூறினர்.

சுழிபுரம் விக்டோறியா கல்லூரிமண்டபத்தில் வட்டுக்கோட்டை எம் பி, திரு. ரி. திருநாவுக்கரசு தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

திரு அமிர்தலிங்கம்மேலும் பேசுகையில் கூறியதாவது:

சட்டத்துறை ஒரு புனித தொழிலாகும். இத்தொழிலை சேவையாகக்கொண்டுநேர்மையுடன் பணியாற்றினல் யாவரும் போற்றும் உன்னத இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எம் இனத்தின் தலைவர்களாக விளங்கும் பலர் சட்டத் தொழிலை ஏற்று புகழ்பெற்ற சேவையாளர்களாக விளங்குவதுபோல், இன்றுபுதியசட்டத்தரணியாக முன்வந்துள்ள த. விக்னராஜாவும் நேர்மை, துணிவு, சாதுர்யம் மிக்கவராக விளங்கவேண்டு என வேண்டுகிறேன்.

### இளைய தலைமுறை

இனத்தின் எதிர்காலம் அவ்வினத்தில் தோன்றும் இளைய தலைமுறையின் கையிலேயே தங்கியிருக்கின்றது. ஆற்றல் மிகுந்த இளைஞர் சமுதாயம் தன்பங்கைச் சரிவரச்செய்வதற்கு ஏற்றதொரு தலைமையைப் பெறவேண்டும்'

### திறமையும் செல்வமும்

நான் சட்டத்தொழிலில் ஈடுபட்டதாலேயே இன்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால்நடாத்தப்படும் 'தர்பார்' எல்லாவற்றிற்கும்ஈடுகொடுக்க முடிகின்றது. தென்னிலங்கையிலுள்ள தலைவர்கள் செல்வத்தின்மேல் வாழ்ந்துகொண்டு அரசியல் பேசுகிறார்கள் ஆனல் எம்மைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாருக எமதுதிறமையைக்கொண்டு அரசியலில் ஈடுபட்டு உழைத்துவருகின்றோம்.

செய்யும் தொழிலே எமக்கு செல்வமாகும்' என்ருர்

### சிவா பேச்சு

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. பேசுகையில், ஒருமுறை எமது தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் சிறப்புரையாற்றினர். அப்போது ஒரு மாணவன் மிகவும் துணிவுடன் பல்வேறு கேள்விகளைக் கேட்டு தனது ஐயுறவை நீக்கிக் கொண்டான். அப்போது அந்தப் பையனை எமது இயக்கத்தில் சேர்த்துக்கொண்டால் நல்லது என்று ஜி ஜி. எனக்குத் தெரிவித்தார். அன்று எமது தலைவர் ஜி ஜி யை கவர்ந்துகொள்ளக்கூடியவராக விளங்கியவர்தான் இன்று எமது பாராட்டுக்குரிய விக்னராஜா. இவரிடம் சகல திறமைகளும் உண்டு. ஆதலால் இவரது எதிர்காலம்பல்வகைச் சிறப்படையும் என்பது திண்ணம்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட மற்றும்பலர் வாழ்த்துரை நிகழ்த்தினர் த. விக்னராஜா தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினர் விழாக்குழு செயலாளர் திரு க அமிர்தசிங்கம் நன்றியுரை நிகழ்த்தி விழா மலரும் வெளியிடப்பட்டது. [உ]

---

# 'தமிழரின் உண்மைவரலாறு இதுவரைஎழுதப்படவில்லை'

"தமிழ் இனத்தின் மொழி வளர்ச்சி, பண்பாடு என்பன மனித சமூகத்தின் வரலாற்றுடன் ஒன்றிணைந்து வந்த ஒன்றே அல்லாமல் பிரிந்த தொன்றல்ல. இதனைச் சமூக விஞ்ஞானப் பார்வையின் மூலமே சரியாகக் கண்டு கொள்ளமுடியும். தமிழ்ச் சமூகத்தின் அரசர்களையும், உயர் அந்தஸ்து உடையவர்களையும் அவர்கள்தம் பெருமைகளைப் பாடுவதுடன் நின்று, அதே கட்டத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள் நிலைமைகளை யதார்த்தமாக உரைக்கத் தவறிய வரலாறுகளையே இன்று 'தமிழர் வரலாறு' என்று மக்கள் மத்தியில் கூறப்படுகிறது. ஆனல் உண்மையான வரலாறு என்பது சாதாரண மக்களையும், அவர்களை ஆண்ட எஜமானர்களது நிலைமைகளையும் கூறுவதாகவே அமைய வேண்டும். எனவே தமிழர்களின் உண்மையான வரலாறு இதுவரை எழுதப்படவில்லை என்றே துணிந்து கூறலாம்"

என அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலைய வெள்ளிவிழா அரங்கத்தில் 'தமிழர் வரலாறும், பண்பாடும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய தமிழ்ச் சிறப்புப் பட்டதாரி ஆசிரியரான திரு. மௌனகுரு தெரிவித்தார்.

### திராவிட இனத்தின் தோற்றம்

யாழ் பல்கலைக்கழக மாணவன் வி சந்திரமோகன்தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

"டார்வினின் பரிணமக் கோட்பாடு யாவராலும் ஏற்கப்பட்டது. தோற்றநிலை, மிருக வாழ்க்கை, விஞ்ஞான யுகம் இப்படி மாறிவந்த படிகளில் வளர்ந்துவந்த மனித இனத்தின் ஆதித் தோன்றல்களில் ஒன்றுதான் திராவிட இனம். எனினும் திராவிட இன உதிப்பு எங்பது எவ்விடத்தில் என்பது இன்னமும் திட்டவட்டமாக நிருபிக்கப்படவில்லை. திராவிட மொழியிலிருந்து பிரிந்த ஓர் இனமே தமிழினமாகும். சங்ககால ஐவகை நிலங்களும், அவ்வாழ்வு, பண்பாடுகள்கூட மனித சமூக வளர்ச்சியை ஒட்டியே நடந்திருக்கின்றன.

'தாயை'த் தலைவியாகக் கொண்ட 'குறிஞ்சி' நில வேடர் வாழ்க்கையில் 'புணர்ச்சியே' பண்பாடாக இருக்கக் காண்கிறோம்.

வேட்டை மிருகங்களை வளர்க்கப் புல்வெளிகளை நாடியமையை 'முல்லை' நில வாழ்வாகவும் அங்குதான் தகப்பன், தாய், அண்ணன், தங்கை என்ற குடும்ப உறவுகள் உருவாவதையும் காணலாம்.

குறுநில மன்னர்கள், அதிகாரிகள்ஏற்படுவதும், தொழிற்பிரிவுகளும் அதனல் சாதிப் பாகுபாடுகளும் 'மருத' நில வாழ்வில் காண்கிறோம். நாகரிகமான இவ்வாழ்விலேதான் நடனம், நாடகம் எனக் கலைகள் முதன்முதலாக ஆரம்பிக்கின்றன குறுநில மன்னர்களின் போராட்டமே சேர, சோழ, பாண்டிய அரசுகளைத் தோற்றுவிக்கிறது. இந்நிலையான நீண்ட வாழ்வின் தார்ப்பரியத்தின் விளைவே, கடற்பிரதேசங்களை நோக்கவும், அதனல் வெளிநாடுகளுடனன தொடர்புகளைத் தமிழர் பெறுவதனையும் 'நெய்தல்' வாழ்வில் காண்கிறோம்.

### வணிக சமூகத்தின் தோற்றம்

'மருதநில' வாழ்வின் 'நிலையான இருப்பு' இச்சமூக வளர்ச்சியுடன் ஒத்துப்போக முடியாத, விரும்பாத நிலையில் உள்ள குறிஞ்சி, முல்லைநில மக்களில் சிலர், சீவியம் செய்யக் குறுக்குவழி என நினைத்த களவெடுத்தலுக்காகப் 'பாலை நில' வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர்

'மருத' வாழ்வு, மன்னர் ஆட்சியுடன் நிலையான காலப்போக்கிலே ஆரியர் வருகையையும், இதனல் நால்வகை வருணப்பாடுகளும் ஏற்படுகின்றன. இந்துமதத் தர்மம், இலக்கியங்கள் உருவாகின்றன தமிழ் அரச சபையில் ஆரியனை பிராமணன் ஆதிக்கம் செலுத்தும் இராஜ குருவாகிறன் தமிழ் இராச்சியங்கள் போர்செய்வதையே கருவாகக் கொண்டு வளர்ந்தன. தமிழரசர்களின் இந்த இயலாத போக்கினல் சலிப்புற்ற நிலையிலுள்ள தமிழர்கள், மறுபுறம் ஆரியரின் 'யாகம்', 'பலி' கொடுத்தல் போன்ற சமயச் சடங்குகளினலும் வெறுப்புற்று வாழ்கிறார்கள் ஆரியச் சமயக் கொள்கைகளை எதிர்க்கும் போக்குடைய 'களப்பிரயர்', 'சமண சமயத்தவர்' வருகையை இந்நேரம் தமிழர்கள வரவேற்கின்றனர் இவ்வருகையின் விளைவாக 'வணிக சமூகம்' என ஒன்று உருவாகிறது. வியாபாரத்துக்குப் 'போர்' செய்வது விரும்பப் படாததினல் வணிகர்கள் சமண, பௌத்த சமயங்களை ஆதரிக்கின்றனர் இதன் பலனய்த் தமிழ் இராச்சியங்கள் எங்கணும் தமிழ்மக்கள் வாழ் பிரதேசங்கள் பூராவும 'பௌத்தம்' பரவியது

உற்பத்திசெய்யாமல் விற்பனை செய்வதன் மூலம் லாபம பெறும் வணிகக் கொள்கை நாட்டிலே உற்பத்தியை பாதிக்கிறது. இதனல் பெரும் பஞ்சம் ஏற்படுகிறது இக்காலகட்டத்திலேதான் சைவமும், வைஷ்ணமும் தோன்றுகின்றன.

### சைவசித்தாந்தம்

'எல்லாம விதிப்படியே நடக்கும்' என்ற பௌத்த, சமணக் கொள்கைகளுக்கு மாறாக இறைவனைப் பூசித்தால் விதியையும் வெற்றிகொள்ளமுடியும்' என்கிற சைவ. வைஷ்ணவ சித்தாந்தங்கள் மூலம் உழவாரத்தைக் கையிலேந்திய அப்பர் போன்ற நிலக்கிழார்களும், சம்பந்தர் போன்ற பிராமணர்களும் மக்களைத் தம்பக்கம் கவர்கின்றனர். இதன் பலனய் ஏற்ற வெற்றியால் தெய்வ உருவங்கள், கலைக்கோயில்கள் ஏற்படுகின்றன. இதேகாலம் 'பாண்டியர்' 'பல்லவர்'களுடன் செய்த போரின் முடிவு சோழ இராச்சியங்களை உருவாக்குகின்றன. இதே கி. பி. 11, 12, 13ல் சைவசித்தாந்தங்கள் உருவாகின்றன.

வடக்கில் 'மாலிக்கபூர்' போன்றோரின் இஸ்லாமிய அரசுக்கெதிராக அவர்களை அழிப்பதற்கு மக்களைத் திரட்ட "இந்துமத சமத்துவம்" ஏற்படுத்தப்படுகின்றது இதன் தாக்கமாக வர்ண, சாதிப் பிரிவுகளை ஒன்று சேர்க்க தமிழர் இராச்சியங்களிலும் அவசியமாகிறது இதனல் வேடன் கண்ணப்பன், புலையன் நந்தன் போன்றவர்களைக் காண்கிறோம்.

இந்துமத சமத்துவக் கொள்கையினல் தெலுங்கு விஜயநகர நாயக்க அரசர் வருகையும் அடுத்து அவர்கள அரசோச்சலும் தமிழ்நாட்டில் ஏற்படுகின்றன. எனவே நாயக்க இஸ்லாமிய போர் தேன்றி இஸ்லாமியரின் வெற்றி நிச்சயமானதும் நாயக்கர்கள் தமிழ்க் குறுநில மன்னர்களானர்கள். 'வீரபாண்டியன்' போன்றோர் இத்தகையோரே.

இதேகாலம் வருகை தந்துள்ள வெள்ளையர்கள் தங்களின் சமய, தொழில்பெருக்கம், அபிவிருத்தி போன்ற கொள்கைகளை நிலைநிறுத்த தொழிலாளர் பிரிவுகள் உருவாகின. தம் ஆட்சி நிர்வாகத்துக்காக தம் பாஷையை பாடசாலைகள் நிறுவி கற்பிக்க முயற்சித்த சமயம் நில உடைமையாளரான பிரபுத்துவ குடும்பங்களைச் சார்ந்த தமிழ் மக்கள் கல்வியில் சிறந்த அரசு நிர்வாகத்துக்கு உதவினர்.",

கருத்தரங்கின் முடிவில் நிலைய பொதுச்செயலாளர் திரு.ப .ஜீவநாதன் நன்றி கூறினர்,

(தொகுப்பு: ஐ சண்முகலிங்கம் (அ)

---

# "பொருளாதாரப் பிரச்னைக்கு தேசியரீதியில் தீர்வு"

## முன்னுள் எம். பி. 'தியாகர்' கருத்து

[கொக்குவில்]

"ஒரு சமுதாயமும் பாதிக்கப்படாதவகையில் பொருளாதாரப் பிரச்னை தேசிய ரீதியில் தீர்க்கப்படவேண்டும்"

இவ்வாறு தமிழ் உழைப்பாளர் தேசிய இயக்க கூட்டத்தில் பங்குபற்றி சொற்பொழிவாற்றிய முன்னைநாள வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராசா கூறினர்.

மேற்படி கூட்டம் திரு விசிவபாலசிங்கம் தலைமையில் பாங்சால் வீதியில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில், "தமிழரின் பிரச்னை என்ருல் யாழ்ப்பாண மக்களின் பிரச்னை என்று எண்ணும் அளவுக்கு நாம் சென்றுளளோம். இந்நிலையில் எமது உரிமைகளை தீர்க்க எவர் ஆயத்தமாக இருக்கிறார்களோ அவர்களோடு சேர்ந்து எமது உரிமைகளைப்பெறவேண்டும்" என்றார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து மீண்டும் விமான சேவையை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடும்படி அரசாங்கத்தைக் கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கபட்டது.

### இயக்க நோக்கம்

இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள பின்வருமாறு!

தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தேசிய நோக்கில் தீர்வு காண்பது, உண்மையான உழைப்பாளிகளை உளளூராட்சித் தேர்தலில் போட்டியிட நிறுத்துவது, தமிழ் சமூகத்தில் சமூககுறைபாடுகளைக் களைதல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வது, சமூக பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவது, ஒருநாடு ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் மேற்படி பிரச்சனைகளுக்குத்தீர்வுகாணல் ஆகியனவாகும். [உ]

---

# தூதுக்குழு கோரிக்கை

(உடுப்பிட்டி)

கரவெட்டி ஸ்ரீநாரத மகாவித்தியாலயத்திற்குப்பௌத்த சமயம் போதிக்கும் ஆசிரியரை நியமித்துத் தரும்படி கரவெட்டி பௌத்த சங்கப் போஷகர் வண தேமட்டாவ அமரவன்ஸ நாயக்கதேரோவின் விசேட செய்தியுடன் சங்கத்தலைவர் திரு. கே தங்கராசா தலைமையில் சென்ற தூதுகோஷ்டி யாழ். அரசாங்க அதிபர் திரு.லயனல் பெர்னண்டோவிடம் கோரிக்கை விடுத்துள்ளது

கரவெட்டியில் பௌத்த விகாரை யொன்று நிறுவித் தரும்படியும் ஏற்கனவே இங்கு பௌத்த விகாரைக்கான காணி தெரிவு செய்யப்பட்டுள்ளதென்றும் அங்கு அரசமரக்கிளையொன் நாட்டப்பட்டுள்ளதென்றும் இத்தூது கோஷ்டி அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளது. (க)

# “ஹிந்தி ஆட்சி மொழியாக தமிழகத்தில் இடமில்லை

## உப-ஜனாதிபதி, ஆளுநர் முன்னிலையில் முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, டிச. 25

“ஹிந்தியை ஆட்சிமொழியாக்க தமிழ்நாடு ஒருபோதும் இடமளிக்காது. இக்கொள்கையுடையோருக்கு நம் ஆதரவு உண்டு.”

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற மூதறிஞர் ராஜாஜி நூற்றாண்டு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில், விழாவில் கலந்துகொண்ட பாரத உபஜனாதிபதி திரு. வி. ஜட்டி முன்னிலையில் உறுதியாக அறிவித்தார். இந்நேரம் தமிழ்நாடு ஆளுநரும் அருகில் இருந்தார்.

### தி. மு. க. மகாநாடு

“திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடாத்தும் ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பு மகாநாட்டை இந்த வகையில் நாம் வரவேற்கிறோம்” என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

### ஜட்டி பேச்சு

இவ்விழாவில் உபஜனாதிபதி பேசுகையில், “ராஜாஜி ஒரு கர்மயோகி. நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர். வாழ்நாள் முழுவதும் அவர் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டுமே இருந்தார்” என்றார்.

### ஆளுநர் உரை

தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாஸ்பட்வாரி பேசுகையில், “இவ்விழா சம்பிரதாயத்துக்காக என்றில்லாமல் நாட்டு மக்கள் ராஜாஜியின் கொள்கைகளைக் கடைப் பிடிக்கவேண்டும்” என்றார். (உ)

# மாணவர்தொழிலாளர்மீதான வழக்குகள் வாபஸ்

-- எம். ஜி. ஆர்.

சென்னை, டிச. 25

ராஜாஜியின் நூற்றாண்டு விழாவையொட்டி தொழிலாளர்கள், மாணவர்கள் மீதான அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்படும்.

இத்தகவலை முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற ராஜாஜிநூற்றாண்டுவிழாவுக்கு நேற்று தலைமை வகித்துஉரையாற்றுகையில் வெளியிட்டார்.

கொலைமுயற்சி தவிர்ந்த ஏனைய வழக்குகளே வாபஸ் பெறப்படும் என்று அவர் தெரிவித்தார்.

‘தொழிற்சாலைகள் முழுமையாகச் செயற்படவேண்டும். எக்காரணம் கொண்டும் தொழிற்சாலைகள் மூடப்படக் கூடாது’ என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். [உ]

★ நீதி ★ ஒழுக்கம் ★ நேர்மை

## “மொத்த வடிவம் ராஜாஜி” நெடுஞ்செழியன் பாராட்டு

சென்னை, டிச. 25

‘நீதி, ஒழுக்கம், நேர்மை இவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் மூதறிஞர் ராஜாஜி இவற்றின் மொத்த வடிவம் அவர்’

இவ்வாறு அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா நெடுஞ்செழியன், சென்னையில் நடைபெற்ற ராஜாஜி நூற்றாண்டுவிழாவில் பேசுகையில் பாராட்டினார். ‘ராஜாஜிகொள்கையில் வழி நடந்தால் வாழ்வின் தரமுயரும்’ என்றார் அவர்.

### ம.பொ.சி.

தமிழ்நாடு சட்டமேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சி. பேசுகை, ‘ராஜாஜியின் ஆத்மா சாந்தியடையும்வகையில் தமிழ்நாடு அரசு அவர் நினைவாக நூல்நிலையம் ஒன்றினை அமைக்கிறது’ என்றார்.

முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் பேசுகையில், ‘நிர்வாகத் திறமையில் ராஜாஜி ஒப்பற்று விளங்கினார்’ என்றார். [உ]


BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

குரெட்டர் 3% மணிகள்

பாவித்து
நெற்பயிரைத் தாக்கும் இலை
தத்தி உட்பட மற்றும் பூச்சிகளையும்
கட்டுப்படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

Melville Assaw Designs

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6


அரசியல் கைதிகள் விடுதலை:

## பொதுத்தேர்தல் நடத்த பங்களாதேஷில் ஏற்பாடு

டாக்கா, டிச. 25

பங்களாதேஷில் அரசியல் கைதிகள் விடுதலைசெய்யப்படுவதுடன் மற்றும்சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்படவிருக்கிறது.

இதுதொடர்பாக பங்ளாதேஷ் ஜனாதிபதி ஷியாவுல் ஹக் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்திருந்த எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அரசியற்கைதிகள் விடுதலை செய்யப்படுவார்களென்றும், பத்திரிகைகளுக்கான கட்டுப்பாடு நீக்கப்படுமென்றும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கான நிபந்தனை இடைநிறுத்தப்படுமென்றும் அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### கோரிக்கை

அமைதியாகப் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

### அவகாசம்

வேட்பாளர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு இம்மாதம் 30ந் திகதிவரை அவகாசம் அளிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசு உறுதியாகத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

“எதிர்காலம் பிரகாசமானது”

## நம்பிக்கையுடன் செயற்பட மகாராணி கோரிக்கை

லண்டன், டிச. 25

“எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது” என்று எலிஸபெத் மகாராணி பொதுநல நாடுகளுக்கு விடுத்துள்ள செய்தி ஒன்றில் கூறியிருக்கிறார்.

“பொது நன்மை கருதி உழைக்கவேண்டும். சில கஷ்டங்கள் எதிர்காலத்தைப் பற்றி நிச்சயமற்ற தன்மையுடையது என்ற நிலையை தோற்றுவிக்க முனையினும் அவற்றிற்கு இடமளிக்காது நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும்” என மகாராணி தொலைக்காட்சி, வானொலியில் பேசுகையில் கேட்டுக் கொண்டார். [உ]

## “கேரளத்தில் மதுவிலக்கு சாத்தியமானது அல்ல” சென்னையில் முதல்வர் தகவல்

சென்னை, டிச. 25

“கேரள மாநிலத்தில் மதுவிலக்கை அமுல் செய்வது சாத்தியபூர்வமானது அல்ல. இந்நடவடிக்கை எடுத்தால் அரசின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் ஏராளமானோர் வேலைவாய்ப்பிழக்கும் நிலையும் உண்டாகும்.”

இவ்வாறு கேரள முதலமைச்சர் திரு. வாசுதேவன் நாயர் கூறினார்.

சென்னைக்கு விஜயம் செய்துள்ள அவர் “தமிழ்நாடு அரசும் கேரள அரசும் ஒன்றையொன்று புரிந்துகொண்டுள்ளன” என்று சொன்னார்.

“கேரள—தமிழ்நாடு எல்லையில் மதுவிலக்கை அமுல் செய்யவேண்டும்” என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார். [உ]

### யாழ்ப்பாணத்திற்கு 50 இராணுவத்தினர் இடமாற்றம்

(கொக்குவில்)

தென்பகுதியிலிருந்து ஐம்பது ராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றலாகிச் சென்ற ராணுவத்தினரின் இடத்திற்கு இவர்கள் இடமாற்றலாகிவந்தனர்.

### உதைபந்தாட்ட போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

பாஷையூர் ஜுப்பிட்டர்ஸ் விளையாட்டுகழகத்தினர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் ஒரேநாளில் முடியத்தக்கதாக ஒரு நொக்அவுட் உதைபந்தாட்டப் போட்டியை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். வெற்றி பெறும் கழகத்திற்கு ஜுப்பிட்டர்ஸ் கழகத்தினரின் கேடயம் பரிசிலாக வழங்கப்படும் இரண்டாம் இடத்திற்கும் பரிசில் கொடுக்க ஏற்பாடாகியுள்ளது.

# “தடை எதுவரினும் தொடர்ந்து சமரஸ முயற்சி”

## எகிப்திய அதிபர் உறுதி

கெய்ரோ, டிச. 25

“எவ்வித தடையேற்பட்டாலும் பொருட்படுத்தாது மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் எகிப்து தொடர்ந்து ஈடுபடும்” என்று எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

நத்தார் தினத்தையொட்டி அவர் அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இவ்விஷயத்தில் திரு. கார்ட்டரின் பங்கும் முக்கியமானது என ஜனாதிபதி சதாத் குறிப்பிட்டுள்ளார்.

### சமாதான மார்க்கம்

எகிப்திய மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்களென்றும் சமாதான மார்க்கத்தை அவர்கள் உறுதியாகப் பேணி நடப்பவர்களென்றும் சதாத் மேலும் தமது செய்தியில் வலியுறுத்தியுள்ளார். (உ)

# வலிகாமம் வடக்கு

## 13-வது விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 13-வது ஆண்டு விளையாட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் பொறுப்பதிகாரி திரு. அ. முருகையா செய்துள்ளார்.

போட்டியில் கலந்து கொள்வதற்கு 30க்கும் அதிகமான விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டிகளில் தாச்சிப் போட்டியும் ஒன்றுக இடம் பெறும். ஆண்களுக்கான 56 மைல் சைக்கிளோட்டப் போட்டி. உதைபந்தாட்டப் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி. கரபந்தாட்டப் போட்டி, கயிறிழுத்தற் போட்டி முதலியனவையும் இடம் பெறும்.

மேற்படிபோட்டிகள் தைப் பொங்கல் தினத்தன்று நடைபெறும். [உ]

# "மனிதஉரிமை மீறப்படுகிறதே"

## பாப்பரசர் கவலை

ரோம், டிச.25
"யேசுபிரான் மனிதகுலத்தை உய்விக்கத்தோன்றி சுமார் 2000 ஆண்டுகள் ஓடி மறைந்தும் மனிதஉரிமைகள் மீறப்படுவதும், மனிதக் கொடுமைகள் நிகழ்வதும்தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன'

இவ்வாறுஇரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்றிரவு சென்.பீட்டர்ஸ் தேவாலயத்தில் நத்தார்தின ஆராதனை உரைநிகழ்த்துகையில் கவலை தெரிவித்தார்.

"ஒவ்வொரு மனிதனது உரிமையும் மனிதாபிமான ரீதியில் பாதுகாக்கப்படவேண்டும்" என்று பாப்பரசர் குறிப்பிட்டார். [உ]

# 'உயர்கல்விமான்களும்தேடிப் படிக்கவேண்டிய நூல்'

[யாழ்ப்பாணம்]
"கணிதம், விஞ்ஞானம் போன்ற உலகியற் கல்விமான்களும் அவசியம் தேடிப்படிக்க வேண்டிய நூல் "சித்தாந்தச் செழும்புதையங்கள்,'

இவ்வாறு நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற திரு. மு. கந்தையாவின் "சித்தாந்தச் செழும்புதையல்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நூலின் 'சதசத்ஆராய்ச்சி' என்னும் பொருளில் ஆய்வுரை வழங்கிய திரு.க,சொக்கலிங்கம் [சொக்கன்] கூறினர்.

சொக்கன் தொடர்ந்து பேசுகையில், "நரைக்க நரைக்க சகிப்புத் தன்மையோடிருந்து சைவசித்தாந்தை ஆழ்ந்து நோக்கிப் படிக்க வேண்டிய அவசியத்தை இந்நூல் நன்கு தெளிவாக்குகின்றது" என்ருர்.

"சொல் வளம், பொருள் வளம், அருள் வளம் மூன்றும் ஒருங்கே நிரம்பியது இந்நூல், 'சைவ உள்ளங்களில் சைவசித்தாந்த உணர்ச்சியை அதிகரிக்கச் செய்யும் சித்தாந்தச் செழும்புதையல் அடங்கிய இவ்வருமையான நூல் ஒவ்வொரு சைவ அன்பர்களின் கைகளிலும் விளங்க வேண்டும் என ஆசியுரை வழங்கிய நல்லை ஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் கூறினர். நூலாசிரியர் திரு க கந்தையாவுக்கு சுவாமிகள் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தார்

இந்நூலின் முதற் பிரதியை மில்க்வைற் அதிபர் திரு க கனகராசா பெற்றுக் கொண்டார். இந்நூலை ஈழத்து சித்தாந்த சைவ வித்தியாபீடம் பதிப்பித்துள்ளது.

இவ்வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை ஈழத்து சித்தாந்த சைவ வித்தியா பீடத் தலைவர் திரு சி செல்வநாயகம் நிகத்தினர். விழாவின் ஆரம்ப உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு. கோபாலகிருஷ்ணன் நிகழ்த்தினர்.

"சைவசித்தாந்தச் செழும் புதையல்க..." என்னும் தலைப்புகளில் கூறப்பட்டுள்ள ஐந்து தலைப்புகளில் சிவஸ்ரீ சோ சுப்பிரமணியக் குருக்கள், திரு க சொக்கலிங்கம் [சொக்கன்], பண்டிதர் வித்துவான் திரு இ திருநாவுக்கரசு, பண்டிதர் திரு இ நமசிவாயம் ஆகியோர்களின் ஆய்விரைகள் இடம் பெற்றன.

சைவவித்தியபீட உப செயலாளர் திரு வ பேரின்பநாயகம் நன்றியுரை கூறினர்.

## ஆயர் நன்றி

[உடுப்பிட்டி]
தமது உடல்நலத்துக்காக இறைவனிடம் மன்ருடிய சகல கத்தோலிக்க குருமாருக்கும், கன்னியாஸ்திரிகளுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் யாழ். ஆயர் அதி. வந். பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நன்றி தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து ஆயர் விடுத்த தமது நன்றி அறிவித்தலில், தமது மேய்ப்புப் பணியைத் தொடர்ந்து ஆற்றும் பொருட்டு எல்லாம்வல்ல இறைவன் தமக்கு மீண்டும் உடல்நலத்தைஅளித்துள்ளார் என்றும், தொடர்ந்து மேய்ப்புப்பணியை ஆற்றுவதற்கு விரைவில் யாழ். மறைமாவட்டத்திற்கு வரமுடியுமென்று நம்புவதாகவும் நம்பிக்கைதெரிவித்துள்ளார். [உ]

## பன்றிக்கோட்டுப் பிள்ளையார்

(யாழ்ப்பாணம்)
வண்ணர்பண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) கோவில் விநாயகர் விரதம் 12-ம் நாளாகிய இன்று மாலை பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மாவின் 'முதல்நாள்பேர்' என்னும் சங்கீத கதாப்பிரசங்கம் நடைபெறுகின்றது.

## உர விநியோகம்

[புலோலி]
வடமராட்சிபபகுதி விவசாயிகளுக்குத்தேவையான பசளை வகைகளை புலோலி கம நல சேவை நிலையம் விநியோகித்து வருகிறது. [உ]

# இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 11-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(26-12-78)

**மேடம்:-** எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது, உதவி செய்வதன்மூலம் குறைகேட்க நேரிடும், உடல்நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**இடபம்:-** களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாவதற் கிடமுண்டு, மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

**மிதுனம்:-** மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவேயிருக்கும் சிலர் கடன்படவும் நேரிடலாம், கடமையில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:-** பெரியவர்கள் உதவிக்கு வருவர், புண்ணிய விருப்பும் மேலிடும், பிள்ளைகளினுல் பெருமைக்கிடமுண்டு,

**சிங்கம்:-** புதிய எண்ணங்கள் மலரும் தொழில்துறையில் முன்னேற்றமுண்டு, சிலருக்கு இருப்பிடமாற்றமும் ஏற்படலாம்.

**கன்னி:-** பொருள் துறையில் திருப்திகரமான சூழ்நிலை ஏற்படும், சிலருக்கு புதுமனை கட்டுவதிலும் ஆர்வம் பிறக்கும், பொதுசனத் தலைமையுடன் புகழுக்கும் இடமுண்டு.

**துலாம்:-** மனதில் விரக்தி நிலைதென்படும், பூமிப்பிணக்குகள் மூலம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்,

**விருச்சிகம்-** அவசர புத்தியினுல் விபரீதங்கள் விளையக்கூடும், சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு, உடல் நலம் கவலையைத்தரலாம், பொறுமை வேண்டும்.

**தனுசு:-** பூமிப்பிணக்குகள் சமரசமுடிவுகாணும், மணவாழ்க்கையில் நன்மாற்றங்கள் ஏற்படும், விவசாயிகளுக்கு விருத்திகாணப்படும்.

**மகரம்:-** எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், பெரியவர்களுடன் கருத்து வேற்றுமை தோன்றலாம் அடக்கம் வேண்டும்.

**கும்பம்:-** வாழ்வில் இன்று வெற்றித்திருநாளாகும், கடமையில் சிறப்படைவதற்கிடமேற்படும் தாய்வழி ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்:-** மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கக்கூடும், புத்திர சுகத்துடன் தனமும் வந்து சேரும். பரோபகாரசிந்தை மேலிடும், வரவேற்கவேண்டிய நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆசிரியர் கோஷ்டி வெற்றி

(யாழ். விளையாட்டுநிருபர்)
யாழ். மத்திய கல்லூரி மாணவர் தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஆசிரியர் கோஷ்டி 3-2 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (உ)

## வளாகக் கோஷ்டி வென்றது

(யாழ். விளையாட்டுநிருபர்)
யாழ் வளாக மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். வளாக கோஷ்டி 2-1 கோலால் ஸ்கந்தவரோதயா கல்லூரி பழையமாணவர் கோஷ்டியை வென்றது.

செல்வன் நஞ்சன் நடுவராக கடமையாற்றினர்.

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
FATHER! DEAR FATHER!!
(Comedy)
Also Latest Cyclone News

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-80
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

ராணி [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ராதா சலூஜா நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ [யாழ்.நகர்]
போன்: 7698 தினசரி 4காட்சிகள்
நீதி தேவன்

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி நடித்த
முத்துமண்டபம் (புதியபிரதி)

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
JACK IN THE BOX
(Color — Sex — Comedy)

வெற்றிமுழக்கமிடும் 5வது நத்தார் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் — Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

ஸ்ரீதர் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, பி.ப. 2-30, 6-30, 9-45
இதுவரை பார்த்தவர்கள் அனைவரதும் பாராட்டலுக்குரிய புதுமை மிகுந்த காவியம்.
கமலஹாசன் - சுஜாதா மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்
இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான்
தான் விளையாட....
உயர்ந்தவர்கள் உள்ளத்திலும்...
ராமகிருஷ்ணு கிருஷ்ணு...
போன்ற இனிய பாடல்கள் நிறைந்த படம்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
கலைமாமணி சிவாஜிகணேசன், மாலினி பொன்சேகா
ஈழத்து நடிகர்கள் விஜயேந்திரன், விஜயதீபன்
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
அன்னைவேளாங்கண்ணி
(கலர்)

கிளிநொச்சி

# நீர்ப்பாசன இலாகா மீது உற்பத்தியாளர் புகார்!

## "எந்த வேலையுமே ஆரம்பிக்கவில்லை"

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில், நீர்ப்பாசன இலாகாவிற்கு மேலதிக அரசாங்க அதிபரால் கொடுக்கப்பட்ட வேலைகள் இன்னமும் தொடங்கப்படாத நிலையில் இருப்பதாகக் கவலை தெரிவித்து, உடனடியாக இவற்றைச் செய்துதந்து உதவுமாறு மேலதிக அரசாங்க அதிபரையும், நிறைவேற்றுப் பொறியியலாளரையும் கோருவதென்று கிளிநொச்சிப்பகுதி விசேட விவசாயத் திட்டத்தின் உற்பத்தியாளர் சங்கம் அதன் நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு, சி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

'உலக வங்கி, ஐந்து குளங்களை நவீன சீர்திருத்தம் என்ற அடிப்படையில் திருத்தம் செய்கிறது. இரணைமடுவில் வலது பக்கம் குடியேற்ற மக்களுக்கு மட்டுமே நீர் விநியோகம் நடைபெறுகின்றது. ஆகவே இப்பகுதியையும் நவீனமுறைச் சீர்திருத்தத்தில் சேர்த்துத் திருத்தம் செய்துதரும்படி நீர்ப்பாசன, மின்சக்தி, காணி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்டுக்கொள்வது.

"வரும் போகத்திற்கு முன்னதாக நீர்ப்பாசனப் பகுதிகளுக்குரிய வேலைகளைச் செய்து தரும்படி பாராளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர் ஆகியோரைக் கேட்டுக்கொள்வது.

'வரும் காலங்களில் நீச் சங்கம் சிபார்சுசெய்பவர்களையே கமவிதானைமாராக நியமனம் செய்யவேண்டுமென்றும், கமத்தொழில் உதவி ஆணையாளர், கமத்தொழில் பெரும்பாக அதிகாரி ஆகியோரை வேண்டிக்கொள்வது.' (அ)

---

## 'மிளகாய் வெங்காயத்திற்குப் பதில் வேறுபயிர் செய்க'

[உடுப்பிட்டி]

"எமது விவசாயிகள் நவீன முறையிலான விவசாய முறைகளை மேற்கொள்வதன் மூலம் அதிக பயன்பெறமுடியும். உப உணவுப்பயிர்களான வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் விலை வீழ்ச்சியடைந்து வருவதால், அவற்றுக்குப் பதிலாக வேறு மாற்றுப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவேண்டும் இதனால் விவசாயிகள் நஷ்டமடையாது பாதுகாத்துக்கொள்வதுடன் வருமானத்தையும் சம்பாதிக்கமுடியும்."

இவ்வாறு அம்பன் கமநலச் சேவை விவசாயப் போதனாசிரியை திருமதி தனவதி கந்தசாமி, துன்னாலை வடக்கில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் பேசுகையில் கேட்டுக்கொண்டார். இக்கருத்தரங்கு இணைப்பாறிய அலுவலக உதவியாளர் திரு. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

விவசாயப் போதனாசிரியை தொடர்ந்துபேசுகையில் "விவசாயத்திற்கேற்ற நிலங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். விவசாய உத்தியோகத்தர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கவேண்டும். இதற்காகவே தொடர்புக் கமக்காரர்கள் கிராமம் தோறும் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொடர்புக் கமக்காரர்கள் தத்தமது பகுதி விவசாயிகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது" என்றும் கூறினார்.

விவசாய விரிவாக்கச் சேவையாளர் திரு. எஸ். கணேசு, துன்னாலை வடக்குப் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சுபேந்திரராசா ஆகியோரும் பேசினர்.

---

## வடமராட்சியில் 'மடிச்சுக்கட்டி'

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல் வயல்களில் 'மடிச்சுக்கட்டி' நோய் வேகமாகப் பரவிவருவதால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

இந்நோய் மிகவும் துரிதமாகப் பரவிவருவதால் இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் அழியும் அபாய நிலை தோன்றியிருக்கிறது

இந்நோயிலிருந்து நெற்பயிர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை புலோலி கமநலச் சேவைநிலைய விவசாயப் போதனாசிரியர் திரு. ஆர் தில்லையம்பலம் மேற்கொண்டுள்ளார். (அ)

---

## எச்சரிக்கையும் அபராதமும்

[புலோலி]

வடமராட்சியின் கடற்கரைப் பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரக்காரர்களுக்கு தலா 30 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வடமராட்சியின் கிழக்குப் பகுதியில் உள்ள வராத்துப் பளையில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரக்காரர்களை பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நிஹால் ஜெயசேகராவினால் நியமிக்கப்பட்ட "விழிப்புக் குழு" வினர் கையும் மெய்யுமாகப் பிடித்து வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலுவிடம் ஒப்படைத்தனர்

இதனையடுத்து உதவி அரசாங்க அதிபர் இரு உழவு இயந்திரக்காரர்களையும் மிகக் கடுமையாக எச்சரித்து 30 ரூபா அபராதமும் விதித்தார். (அ)

---

## பஸ் நிலையத்தில் சீசன் டிக்கட்

[புலோலி]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் வைத்து இதுவரை காலமும் விற்பனை செய்யப்பட்டு வந்த சீசன் டிக்கட்டுகள் இம்மாதம் முதல் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து வழங்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் 26-ந் திகதி தொடக்கம் 5-ந் திகதி வரை சீசன் டிக்கட்டுகள் இனிமேல் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் உள்ள இ. போ. ச. அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ தெரிவித்துள்ளது. [அ]

......

## உரவிலைபற்றிய புகார்மீது நடவடிக்கை

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்திலுள்ள நிறுவனங்களில் பசளை விற்பதில் விலை முரண்பாடுகள் இருப்பதாக மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

பசளைக் கூட்டுறவுச்சங்கங்கள் ஒருவிலைக்கும் விவசாய சேவை நிலையங்கள் வேறொரு விலைக்கும் விநியோகிப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக பலவிவசாயிகள் சங்கடப்படுகிறார்கள்.

பசளைகளை மாவட்டம் முழுவதும் ஒரே விலையில் விற்கும்படி மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமும் விவசாய சேவைநிலையமும் 4 சதவீத லாபம் வைத்து விற்க அனுமதிப்பது எனவும் அக்கூட்டத்தில் முடிவுஎடுக்கப்பட்டது.

---

நூல் விமர்சனம்:

## 'பிள்ளையார் கதை'

சைவசமயத்தவர் எக்கருமத்தைச் செய்ய அரம்பிக்கும் போதும் விநாயகப் பெருமானை வணங்கித் தொடங்குவதே வழக்கம் 'ஓம்" என்னும் பிரணவத்தின் வடிவமே விநாயகர் விநாயகப் பெருமானுக்கு பிள்ளையார், கணபதி, விக்கினேஸ்வரன், கணேசர் ஐங்கரர் முதலிய திருநாமங்களுமுள விநாயகப் பெருமானைக் குறித்துப் பல விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. மார்கழிமாதத்தில் 21 நாட்கள் அனுஷ்டிக்கும்விரதம் பெருங்கதை அல்லது பிள்ளையார்கதை விரதம் என்று அழைப்பர் இந்த 21 நாட்களும் பிள்ளையார் கதை விநாயகர் ஆலயங்களில் பக்தியுடன் படிக்கப்படும் விரத மநுட்டிப்பவர் அதனைப்பக்தி சிரத்தையுடன் கேட்டுப் பெரும்பயனடைவர்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார்கதை என்னும் நூலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் தர்ம பரிபாலன சபையார் வெளியிட்டுள்ளனர். இது அவர்கள் ஆற்றிவரும் சைவப்பணிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்நூலின் கண் விநாயகப்பெருமானின் திருவருட் செயல்களும் பெருமானை அர்ச்சிக்கும் முறையையும் நூற்பயனும் கூறப்பட்டுள்ளன இந்நூலின் கண் பிள்ளையார் கதை மாத்திரமன்றி போற்றித்திருவாகவல், வருக்கைக் கோவை ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவல், விநாயகர் கவசம் என்ற பாடற்பகுதிகளும் அடங்கியுள்ளன

சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோவில் தர்மபரிபாலனசபையாரின் இவ்வரிய பெரும் பணியை சைவஉலகம் போற்றிப் பெருமைப்பட வேண்டும்

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் (இலங்கை)

---

## "சோர்வு விகிதாசாரம் விஸ்தரிக்கப்படவேண்டும்"

### கூட்டுறவுஊழியர் சங்கத்தில்தீர்மானம்

[மன்னார்]

ப நோ கூ சங்கங்களின் மன்னார் மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் அவசர கூட்டமொன்று மாவட்ட பணியாளர் சங்கத் தலைவர் திரு எஸ் சிகாமணி தலைமையில் நடைபெற்றது

தாய்ச்சங்கப் பிரதிநிகளான தலைவர் திரு எஸ் கே திருச்சிற்றம்பலம், யாழ் ப நோ கூ தொழிற்சங்கத தலைவர் திரு எஸ் இலட்சியபூபதி ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்டப் பணியாளர்களின் பலதரப்பட்ட பிரச்னைகள்பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. திரு சிகாமணி தனது தலைமையுரையில் "பணியாளர்களின் ஐக்கியத்தை வலியுறுத்தி அவர்கள் எதிர்காலத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்

மாந்தை வடக்கு சங்கத்தின் பிரச்னைகள் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதற்கு சம்பந்தபபட்ட அதிகாரிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்து மன்னார் மாவட்டத்தில் நெல் கொள்வனவு சம்தமாக ஏற்படும் சோர்வுகட்கு தாய்ச் சங்கம் தகுந்த தடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் கேட்டுக்கொண்டார்

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. எஸ் கே. திருச்சிற்றம்பலம் கூறியதாவது; "வருடாந்தக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கமைய நெல்சந்தைப்படுத்தும் பகுதியினர்க்கு வழங்கப்படும் சோர்வு விகிதாசாரம் எங்கள் அங்கத்தவர்களுக்கும் விஸ்தரிக்கப்படல்வேண்டும் என்ற தீர்மானம் கூட்டுறவுப் பகுதி மந்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளது" என்றார்.

இலட்சியபூபதி பேசுகையில் எங்கள் மத்தியில் ஐக்கியம் வேண்டும். இதனை பலரும் உணர்ந்து நடப்பதால்தான் நாம் முன்னேறமுடியும் சங்கத்தின் அபிவிருத்தியில் பணியாளர்கள் அதிக அக்கறைகாட்ட வேண்டும் எமது கடின உழைப்பே சங்கத்தை வளரச் செய்யும் என்றார்.

மாவட்ட ரீதியில் உள்ள பணியாளர் பிரச்னைகள் தனித்தனியே ஆராயப்பட்டு ஆலோசனை வழங்தப்பட்டது.

[சங்கானை நிரு.-உ]

---

## தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவருக்கு கட்டுப்பாடு?

### வெளிவாரிநிறுவன இயக்குனர்அச்சம்

(யாழ்ப்பாணம்)

"தரப்படுத்தல் முற்ருக ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டபோதிலும், தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை, இலங்கைப்பல்கலைக்கழகம் தரப்படுத்தல் மூலம் அவர்களைக் கட்டுப்படுத்தவேமுயற்சிக்கும்போல் தெரிகிறது. இந்நிலையில், வெளிவாரிப் பட்டப் படிப்புகள் நிறுவனம், இந்த வருடம் அதிக அளவுமாணவர்களை அனுமதிக்க ஒழுங்குகள் செய்துள்ளது. தமிழ்மாணவர்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் இம்மாத இறுதியில், புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படும்போது இப்போதுள்ள மாணவர்கள் 'ராகிங்'போன்றவற்றில் ஈடுபடுவது எவ்விதத்திலும் மகிழ்ச்சிதரக் கூடியதாக இருக்கமுடியாது 'ராகிங்' இங்கு தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்"

இவ்வாறு வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவன இயக்குனர் திரு, மா. குலேந்திரன் வெளிவாரிப்பட்டப் படிப்புகள் நிறுவனத்தில் நடைபெற்ற நத்தார் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிற்பக்கலாநிதி திரு. செ. சிவப்பிரகாசம், பதிவாளர் திரு. ந. சோமசேகரம் உட்படப் பலர் உரையாற்றினர்.

---

## தேவாலயம்

[உடுப்பிட்டி]

பூநகரிப்பகுதியில் உள்ள இராஞ்சியில் 'கிறிஸ்துராசா' தேவாலயம் ஸ்தாபித்து வைக்கப்பட்டுள்ளது வங்காலை பங்குக்கட்டளைக்குரவர் வண பிதா கொன்ஸல்ஸ் அடிகளார் தலைமையில் மூன்றுடக்குக்குரவர்களினல் தமிழ்பண்பாட்டிற்கமைய நிறைகுடம் வைக்கப்பட்டு குத்துவிளக்கேற்றி கிறிஸ்துராசா திருச்சொரூபம் பிரதிஷ்டைசெய்து வைக்கப்பட்டது' அத்துடன் திருச்சொரூபச் சுற்றுப்பிரகாரமும் இடம்பெற்றது.

இத்தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இராஞ்சி சிவபுரம், வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு ஆகியகிராமங்களின் வளர்ச்சிக்காக விசேட ஆராதனைகள் நடாத்தப்படுகின்றன.

தேவாலய ஸ்தாபித தினத்தன்று பாடற்பூசை ஆராதனைகளும், கிறிஸ்துநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டன. [அ]

---

## சந்தையை அகற்றுவதற்கு ஆட்சேபம்

[உடுப்பிட்டி]

அல்வாய் தெற்கில் தற்போதுள்ள மக்கள் சந்தையை அகற்ற வேண்டாமென்றும், தொடர்ந்து இச்சந்தையை வைத்திருக்குமாறும் அல்வாய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கம் பருத்தித்துறை எம். பி யைக் கோரியுள்ளது.

1965ம் ஆண்டு இச்சந்தை கட்டப்பட்டு கட்டைவேலிக் கிராமசபையினல் பரிபாலிக்கப்பட்டுவருகின்றது.

முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடியும், அல்வாய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கமும் எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே இச்சந்தை நிறுவப்பட்டது.

தற்போது 40,000 ரூபா செலவில் புதிய சந்தை ஒன்று அல்வாயதெற்கு பிரதான வீதியில் இருந்து அரைமைலுக்குள் நிறுவப் பருத்தித்துறை எம். பி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதால் இச்சந்தையை தற்போதுள்ள இடத்திலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தொடர்ந்தே அல்வாய் தெற்குப் பொதுமக்கள் சந்தையை அகற்றுவதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். [அ]

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.